# நூலகம் ஆய்விதழ்

## ஆய்வுக்கட்டுரைகளுக்கான கையேடு- 2014

| | |
|---|---|
| | **நூலகம் ஆய்விதழின் விடயப்பரப்புகள்** |
| 1. | **இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களுக்கிடையே ஆய்வுக்குட்படுத்த வேண்டியதாகக் கருதப்படும் " பொருளாதார வரலாறும் கிராமிய சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும்" தொடர்பான விடயப்பரப்புகள்** |
| 1.1 | யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கை: ஒல்லாந்தர் காலம் முதல் 1950 வரை ஒரு வரலாற்று நோக்கு |
| 1.2 | வன்னிப் பிராந்தியத்தில் நீர்பாசன அபிவிருத்தியும் குடியேற்ற திட்டங்களின் வளர்ச்சியும் (1900-1970) |
| 1.3 | சீவல் தொழில் - மரவரிமுறை தொடக்கம் கூட்டுறவுத் தவணை முறை வரை - 20ம் நூற்றாண்டில் சீவல் தொழிலாளர் வாழ்வியல் - ஓர் சமூகவியல் நோக்கு |
| 2. | **இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களுக்கிடையே ஆய்வுக்குட்படுத்த வேண்டியதாகக் கருதப்படும் " சமூகம், சமூக நிறுவனங்கள், பண்பாடு, சமயம் "தொடர்பான விடயப்பரப்புகள்** |
| 2.1 | யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (1900 - 1970) |
| 2.2 | வட இலங்கையில் பட்டினங்களின் வளர்ச்சியும் பட்டின சபைகளும். (1900 - 1970) |
| 2.3 | சர்வசன வாக்குரிமையும் கிராமச்சபைத் தேர்தல்களும் உள்ளூர் (Local) அரசியலும் - 1970 க்கு முற்பட்ட கால வளர்ச்சிகள் பற்றிய அரசியல் சமூகவியல் நோக்கு |
| 2.4 | வட இலங்கையில் சிக்கன சேமிப்புச் சங்கங்கள் (1900 - 1980) - அரசியல் மயப்படுத்தப்படாத கூட்டுறவு இயக்கம் ஒன்றின் வரலாறு. |
| 2.5 | யாழ்ப்பாணத்தின் பிள்ளையார் கோவில்கள், விவசாயக் குடியான்களின் சமயம் (PEASANT RELIGION) என்னும் நோக்கில் ஓர் கருத்துரை |
| 2.6 | வட இலங்கையின் நாட்டார் தெய்வங்கள் |
| 2.7 | ஒரு கிராமத்தின் எழுச்சி (1930 - 1980) (அரியாலை, இணுவில், குரும்பசிட்டி, மயிலிட்டி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, துணுக்காய், பேசாலை, என்று நீளும் பட்டியலில் குறித்த ஒன்றை தேர்வு செய்க) |
| 2.8 | யாழ்ப்பாணத்து நாவல்களில் கிராமம் |
| 2.9 | சாதியின் புவியியல் (The Geography of Caste)<br>ஏதாவது ஒரு பிராந்தியத்தைத் தேர்ந்தெடுத்து அப்பகுதியின் சாதிகளையும், குடியிருப்புக்கள் முறை என்பனவற்றைப் பற்றிய நுண் ஆய்வு. உதாரணம், வலிகாமம், பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, தீவுப்பகுதி) |
| 2.10 | வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களின் முஸ்லிம் கிராமங்கள் |
| 2.11 | 19ம், 20ம் நூற்றாண்டுகளில் எருக்கலம்பிட்டிக் கிராமம் |
| 2.12 | யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியும், யாழ்ப்பாண நகர முஸ்லிம்களின் கல்வி வரலாறும் - 'இடப்பெயர்வு வரையான காலம்' |
| | |